ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 01.02.2008

## சனவரி 2008இல் பணவீக்கம்

உள்;ரில் உற்பத்தி செய்யப்படும் வேளாண்மைப் பொருட்களின் (அரிசி, காய்கறி, தேங்காய் மற்றும் மீன்) தாழ்ந்த நிரம்பலினாலும் குறித்த சில உணவுப் பொருட்களின் (கோதுமை, பால் உற்பத்திகள், சீனி மற்றும் பருப்பு) பன்னாட்டு விலைகளிலான தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் பெற்றோலிய பொருட்களின் விலைகளின் மேல் நோக்கிய திருத்தம் போன்றவற்றின் தீவிரத்தினாலும் 2008 சனவரியில் நுகர்வோர் விலைகள் அதிகரித்தன. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு நுகர்வோர் விலைகள் கடந்த மாதத்துடன் ஒப்பிடுமிடத்து சனவரி 2008இல் 3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பின் 80 சதவீதம் அதிகரித்த உணவு விலைகளினால் பிரதிபலிக்கப்பட்ட அதேவேளை பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு போன்றவற்றின் விலைத் திருத்தங்கள் மேலும் 16 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளன. இதன்படி, புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் புள்ளிக்குப் புள்ளி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பணவீக்கம் 2007 திசெம்பரில் 18.8 சதவீதத்திலிருந்து 20.8 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 16.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

முக்கியமாக எண்ணெய் உதவுதொகை நீக்கப்பட்டமை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகளிலான அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக பணவீக்கத்தின் மேல் நோக்கிய அசைவு 2007 நடுப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்டது. பன்னாட்டு விலை அதிகரிப்புக்களின் உள்வாங்குதலானது, அது ஒரு – நேர விலை அதிகரிப்புக்கு இட்டுச் சென்றாலும் கூட அரசாங்கத்தின் விரிவுபடுத்தப்பட்ட படுகடன்களின் ஊடாக இவற்றிற்கு உதவுதொகை வழங்குவதற்கான தேவையினை தவிர்ப்பதன் மூலம் எதிர்கால பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகை ஒரு – நேர அதிகரிப்பானது அடுத்து வரும் சில மாதங்களில் இல்லாது ஒழிந்து விடும். எனவே, இது முழுமையாக இல்லாது ஒழியும் வரை பணவீக்கமானது ஏறத்தாழ 16 தொடக்கம் 18 சதவீதம் வரையாக 2008இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் காணப்படும்.

கேள்வி அழுத்தங்களினால் எழுகின்ற பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியானது இறுக்கமான நாணயக்கொள்கை வழிமுறையை கையாள்கின்றது. ஒரு இறுக்கமான ஒதுக்குப்பண நிகழ்ச்சித்திட்டம் 2007இல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஒதுக்குப் பணத்தின் நாளாந்த மட்டங்களின் காலாண்டு சராசரிகளினை இலக்கிட்டு மேலும் ஒரு இறுக்கமான நிகழ்ச்சித்திட்டம் 2008இற்காக திட்டமிடப்பட்டுள்ளது. இந்தவகையில், ஒதுக்குப் பணமானது 2008 சனவரிக்கான குறியீட்டு இலக்கிற்கு உட்பட்டதாகவே தொடர்ந்தும் காணப்பட்டது.

இதன்படி, குறைவடைந்து செல்லும் கேள்வி அழுத்தம் மற்றும் நிரம்பல் பக்கத்திலிருந்தான சில சாதகமான அபிவிருத்திகள் போன்றவற்றிற்கு பதிலிறுத்து பணவீக்கமானது வரைபடத்தில் காட்டப்பட்டதைப் போன்று 2008 இறுதியில் 10 தொடக்கம் 11 சதவீதத்திற்கும் 2009 இறுதியில் 9 தொடக்கம் 10 சதவீதத்திற்கும் ஒரு படிப்படியான பாதையில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், பன்னாட்டுச் சந்தையிலான ஏதாவது எதிர்பார்க்கப்படாத பெருமளவிலான விலை மாற்றங்கள் இந்த எதிர்பார்க்கப்பட்ட பாதையில் விலகலினை ஏற்படுத்தும்.

